## நெல்லிக்குப்பம் நகராட்சி
## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2020–ம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் தேதி (11.11.2020) புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் அவசரக் கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.பிரபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**மன்றபொருள்.1.** நெல்லிக்குப்பம் நகராட்சி – சிறப்பு சாலை திட்டம் (SRP) 2020–21 ம் ஆண்டிற்கு தார் சாலை அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ. 200.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களின் நாள் 09.11.2020 ந் தேதியிட்ட அலுவலக தொலைபேசி செய்தியில் மேற்கண்ட மதிப்பீட்டு தொகைக்கு பணிகள் தேர்வு செய்து நகர்மன்ற அனுமதி பெற்று மதிப்பீடுகள் மற்றும் தீர்மான நகல் அனுப்பி வைக்க தெரிவிக்கப்பட்டது . அதன்படி கீழ் கண்ட பணிகள் தேர்வு செய்யப்பட்டுள்ள விவரம் வருமாறு .

| வ.எண் | சிப்பம் எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 1 | விஸ்வநாதபுரம் புதுநகர் புது தெரு 1 , விஸ்வநாதபுரம் தொட்டி தெரு , விஸ்வநாதபுரம் செட்டியார் தெரு , விஸ்வநாதபுரம் புதுநகர் புது தெரு 2 , அப்துல் கலாம் நகர் , அப்துல் ரஹமான் நகர் , SL நகர் , சிவசக்தி நகர் திருகண்டேஸ்வரம் , பல்ராம் நகர் , கல்கி நகர் , பாஸ்யம் நகர் , வள்ளலார் நகர் மற்றும் தந்தை பெரியார் தெரு விரிவாக்கம் சாலையில் தார் சாலை அமைத்தல் பணி , (வார்டு எண். 1,3,14,16, மற்றும் 25 ) | 200.00 |
| மொத்தம் | | | 200.00 |

மேற்கண்ட சிப்பம் – 1க் குண்டாண பணிகளை தேர்வு செய்து மதிப்பீட்டு தொகைக்கு நகர் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு ;- 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அரசு திட்ட நிதி முழு மான்யத்துடன் பெற அரசுக்கு பிரேரணை அனுப்பிட மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 2823/2020/இ1)**

**தீர்மான எண் : 157 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.2.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் குடிநீர் நிதியின் கீழ் மன்ற தீர்மான எண். 110, நாள் 31.08.2020 ன்படி 14.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை இறுதி செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட குடிநீர் பகீர்மான குழாய்களில் ஏற்படும் அடைப்பு மற்றும் உடைப்பு சரி | 9.90 | திரு .R. ராம்குமார்<br>பெரிய எலந்தம்பட்டு | **0.02%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | செய்தல்,சிறு மின் விசை மின் மோட்டார்களில் ஏற்படும் பழதுகளை சரி செய்தல், மோட்டார் ஸ்டாட்டர்களில் ஏற்படும் பழதுகளை சரி செய்தல் மற்றும் பராமரிப்பு பணிகள் | | M/s.அருணாச்சல அசோசியேட் நெல்லிக்குப்பம். | **00.60%** மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு : -1.வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான 0.02 % ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திரு .R. ராம்குமார் , பெரிய எலந்தம்பட்டு ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம் .

2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம் .

**(ந.க.எண் . 2905/2020/இ1)**

**தீர்மான எண் : 158 அலுவலக குறிப்பினை ஏற்று குறைவான ஒப்பந்தபுள்ளியை ஏற்க அனுமதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.3..** நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மன்ற தீர்மான எண் . 326 நாள் . 31.12.2019 ன் படி

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. (லட்சம்) |
|---|---|---|
| 1 | வார்டு எண் . 28 மேல்பாதி பகுதியில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி கட்டுதல் பணி | 28.00 |
| 2 | வார்டு எண் . 15 வாழப்பட்டு பகுதியில் 1.00 இலட்சம் லிட்டர் கொள்ளவு கொண்ட மேல் நிலை நீர்த் தேக்க தொட்டி கட்டுதல் பணி | 28.00 |

மறு ஒப்பந்தபுள்ளிக்காக 02.10.2020 அன்று மாவட்ட அளவில் தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் (வெ.ஆ.எண்.66/ விளம்பரம்/2019/செ.ம.தொ.அ/கடலூர்/நாள் 02.10.2020) மக்கள் தொடர்பு அலுவலர் , செய்தி மக்கள் தொடர்புதுறை , கடலூர் அவர்கள் மூலமாக கொடுக்கப்பட்டு தின செய்தி , சென்னை அவர்களுக்கு ரூ.12000/— நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு . மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.0986 /2020/இ1)**

**தீர்மான எண் : 159 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள்.4..** நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் நிதியில் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் நகராட்சிக்கு சொந்தமான ஆரம்ப சுகாதார நிலையத்தில் இயங்கி வரும் 25 KVA ஜெனரேட்டர் பழுது ஏற்பட்டதால் அதனை சரி செய்து ஜெனரல் சர்வீஸ் மற்றும் ஆயில் சர்வீஸ் செய்ததிற்கு ரூ.83153/— Universal Diesal Sales & Services , 40 , Sathani Street , PillaThottam , Puducherry அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கம் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு. மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 1738 /2020/இ1)**

**தீர்மான எண் : 160 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள்.5..** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் குடிநீர் நிதியில் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15 ன் கீழ் பகீர்மான குழாயில் ஏற்படும் குழாய் உடைப்பு , மெயின் குழாய் அடைப்புகள் சரி செய்தல் அதற்கு தேவையான உபகரணங்கள் மற்றும் ஆட்களுடன் தினசரி ஒரு மெயின் குழாய் அடைப்பு ,

உடைப்பு சரி செய்ததிற்கு ரூ . 78750/– திருமதி . எஸ்.புவனேஸ்வரி அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கம் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு. மன்றம் பதிவு செய்யலாம்.

**(ந.க.எண். 2495 /2020/இ1)**

**தீர்மான எண் : 161 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**<u>மன்றபொருள்.6..</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியான ஜம்புலிங்கம் பூங்கா அங்கான்வாடி மையம் பழுது நீக்கம் செய்வதற்கு (தரம் உயர்த்துதல் மற்றும் பழுது நீக்குதல்) மதிப்பீடு அனுப்பி வைக்கப்பட்டதில் கடலூார் , மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல் முறை உத்திரவு ந.க.எண். அ3/2466/20 நாள் . 02.11.2020 ன் படி பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட (ICDS) நிதியில் ரூ . 200000/– ற்க்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்திரவிட்டுள்ளது . நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கம் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு . 1. மன்றம் பதிவு செய்யலாம் .

2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண். 2095 /2020/இ1)**

**தீர்மான எண் : 162 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டு அனுமிதிக்கப்பட்டது . .**

**<u>மன்றபொருள்.7..</u>** தமிழக அரசின் மூன்றாமாண்டு சாதனையை முன்னிட்டு "சாதனை மலர் 2020 " நெல்லிக்குப்பம் நகராட்சியில் 2017–18 , 2018–19 மற்றும் 2019– 20ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட , மேற்கொள்ளப்பட இருக்கும் திட்ட பணிகளின் விவரத்தை கடலூார் , மாவட்ட ஆட்சித் தலைவர் ந.க.எண். செமதொ/2020 நாள்.18.02.2020ன் படி விளம்பரம் செய்ததில் தினசூரியன் நாளிதழ்க்கு விளம்பரத் தொகை ரூ . 9600/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 1539/2020/இ1)**

**தீர்மான எண் : 163 அலுவலக குறிப்பினை ஏற்று அஇனுமதிக்கப்பட்டது .**

**<u>மன்றபொருள்.8.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் ஈப்பு TN-31/AE– 5944 வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதை நீக்கி பயன்பாட்டிற்கு கொண்டவரப்பட்டதற்கு அவசர அவசியம் கருதி அங்கீகரிக்கப்பட்ட மகேந்திரா டீலர் SR CAR CARE , No . 5 Bye Pass Road , சிங்காரதோப்பு , சிதம்பரம். அவர்களுக்கு பட்டியல் தொகை ரூ. 43978/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2667/2020/இ1)**

**தீர்மான எண் : 164 அலுவலக குறிப்பினை ஏற்று அஇனுமதிக்கப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி